## தமிழக மக்களுக்கு உதவாத

# மனிதநேயமில்லாத ஒன்றிய அரசுக்கு

# மக்கள் பாடம் புகட்டுவார்கள்

தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மாவட்டங்கள் தென்மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புக்கு தி.மு.க. அரசு உடனடியாக பேரிடர் மீட்பு துறை அதிகாரிகளை அமைச்சர்களை எல்லோரும் அங்கு களத்தில் சென்று மக்களுக்கு உணவு கொடுத்து பாதுகாப்பாக அவர்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் அவர்களை அழைத்து வந்து முகாமில் தங்க வைத்தும் இரவு பகல் பாராமல் வெளியேற்றியும் மருத்துவ முகாம் நடத்தியும் குடும்பத்திற்குத் தேவையான பொருள்கள் கொடுத்துஉழைத்து வருகிறார்களே அதைப் பற்றி சிந்திக்காமல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மழை பெய்த அந்த நாள் நள்ளிரவில் அங்கு சென்று முழுமையாக அதிகாரிகளோட ஆலோசித்து பணிகளை எல்லாம் வேகப்படுத்தி செயல்படுத்திக் கொண்டு அங்கேயே இருக்கிறாரே அதை எல்லாம் புரியாமல் தெரியாமல் குற்றம் குறைகளை சொல்லுவது என்று தொழிலாக வைத்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்

அவர்களுக்கு இப்படி பேசினால் தான் அவர்களுடைய செய்திகள் பத்திரிகைகள் ஊடகங்களில் வரும் என்பதற்காக பேசி கொண்டு இருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்கு செல்லுவது என்பது அவர் செல்லுவதற்கு முன்பே பிரதமரை சந்தித்துபேச நேரம் கேட்கப்பட்டது. சென்னையிலும் தென் மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள இழப்புக்கு நிதி கேட்க சந்திப்பதற்காக நேரம் கேட்டார்கள் இதுகூட தெரியாதா.

நள்ளிரவு பத்தரை மணிக்கு சந்தித்து பேசி அவர் விளக்கமாக எல்லா இழப்புகளையும் புகைப்படங்களோடு கொடுத்து பேசி விட்டு வந்திருக்கிறார்

இன்னும் ஒன்றிய அரசு மவுனமாக வாயை மூடிக்கொண்டு இருக்கிறது இதற்கு அண்ணாமலையும் இந்த கூப்பாடு போடும் குறுகிய எண்ணம் கொண்ட கட்சிகளும் நிதி கேட்டு குரல் கொடுக்காமல் இருந்தவர்கள்

வாயே திறந்து பேசாமல் இருந்து விட்டு இப்போது 1000கோடி கொடுத்துள்ளதாகவும் அதைசெலவு செய்யுங்கள் எனக்கூறும் அண்ணாமலை பாதித்த பகுதிகளுக்கு நேரில் போகாமல் ஒரு ரூபாய் கூட உதவாமல் பேசுவதற்கு தகுதி உள்ளதா.

மூன்று நாட்களில் மக்கள் முழுமையாக பாதுகாக்கப்பட்டு பள்ளி கல்லூரிகள் எல்லாம் திறக்கப்படுகிறது இயல்புநிலை உருவாகி வருகிறது.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் நியாய விலை கடைகள் மூலமாக நேரடியாக 6 ஆயிரம் ரூபாய் நிதி உதவியும் கொடுக்கப்பட்டு வருகிறது

அதே போல் முதலமைச்சர் தாய் உள்ளத்தோடு தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, நாகர்கோவில் பாதிப்புகளை நேரில் சென்று பார்த்து அந்த மக்களுக்கு உதவுகின்ற விதத்தில் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அங்கேயே தங்கியிருந்து பணியாற்ற உத்தரவு பிறப்பித்து அங்கு பாதித்த குடும்பங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதி உதவி கொடுக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

மக்கள், முதலமைச்சரின் சேவையை பாராட்டுகிறார்கள் வாழ்த்துகிறார்கள் இதை பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு இதுவரை ஒன்றிய அரசு நிதி அமைச்சர் தமிழகத்தில் எத்தனையோ பெரிய புயல்கள் மழை பாதிப்பு வந்த பொழுதெல்லாம் மாநில அரசு நிதி உதவி கேட்ட பொழுதெல்லாம் கொடுப்பார்கள் ஆனால் கொடுக்கிற நிதி எந்த விதத்திலும் உதவாவிட்டாலும் மாநில அரசுஉதவி கொண்டிருக்கிறது இதுதான் வரலாறு.

எந்த சூழ்நிலையிலும் ஒன்றிய அமைச்சர்கள் பாதித்த மக்களை இழிவு படுத்தியோ மாநில அரசின் மீது குற்றம் குறைகளை சொல்லியோ ஊடகங்களில் பகிரங்கமாக பேட்டி கொடுப்பதும் கருத்து சொல்லுவதும் நடைமுறையிலேயே இல்லை.

ஆனால் தமிழ்நாட்டில் பிறந்து ஒரு தமிழ் பெண் ஒன்றிய அரசில் நிதி அமைச்சராக இருக்கிறாரே அவர் தமிழ்நாட்டு மக்களின் வெள்ள பாதிப்பு நிலைமைகளை உணராமல் புரியாமல் அவர்களின் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாநில அரசோடு சேர்ந்து பணியாற்றுவதற்கு பதிலாக மக்களையும் கொச்சைப்படுத்தி மாநில அரசையும் கொச்சைப்படுத்தி ஒரு மோசமான முன்னுதாரணமாக தவறான கருத்துக்களை ஒன்றிய நிதி அமைச்சர் பேசி இருப்பது ஒட்டுமொத்த தமிழர்களின் மனநிலை வருத்தத்தோடு பார்க்கிறார்கள்.

தமிழகத்துக்கு பேரிழப்பு மழை வெள்ளத்தில் ஏற்பட்டுள்ளது பேரிடர் நிவாரண நிதியாக ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு கொடுத்து வரும் அந்த அடிப்படையில் தான் இந்த ஆண்டு கொடுக்க வேண்டிய பேரிடர் நிவாரண நிதியை தான் கொடுத்து இருக்கிறீர்கள்

தமிழகத்தில் இதுவரை பெய்யாத ஒரு மழை 241 செ.மீ.க்கு மேல் ஒட்டு மொத்தமாக கொட்டி தீர்த்தது

புதிதாக சென்னை மாவட்டத்தோடு இணைக்கப்பட்ட மாநகராட்சி பகுதிகளில் இருக்கும் பகுதிகளில் கடுமையாக வெள்ளம் வீடுகளிலும் அடுக்குமாடி குடியிருப்புகள் ஏரியாக்களிலும் சூழ்ந்துள்ளதால் மக்கள் வாழ முடியாமல் வீடுகளுக்கும் வர முடியாமல் கடுமையாக பாதித்துள்ளார்கள்

அவர்களை பத்திரப்படுத்தி எந்த உயிர் சேதமும் இல்லாமல் ஒட்டுமொத்த மக்களுக்கு முழு பாதுகாப்பு கொடுத்து அவர்களுக்கு உணவு கொடுத்து குடும்பத்துக்கு தேவையான பொருட்களை கொடுத்து முகாம்களில் தங்க வைத்தும் அனைத்து அமைச்சர்கள் அதிகாரிகள் 24 மணி நேரம் தமிழகம் முழுவதும் இருக்கிற தூய்மை பணியாளர்கள் மருத்துவர்கள் உள்ளாட்சித் துறை ஊழியர்கள் மின்சாரத்துறை ஊழியர்கள் என அனைவரும் வந்து தங்கி இருந்து அத்துணை பணிகளையும் செய்து மக்களோடு இருந்து காப்பாற்றி செயல்பட்டவர்களே.

ஒன்றிய அரசு 2015ல் நான்காயிரம் கோடி கொடுத்ததாக சொல்லுகிறது சென்னை மாநகராட்சியில் வடசென்னை பகுதிகளில் மழைநீர் கால்வாய்களை இணைத்து கொசஸ்தலை ஆற்றில் களப்பதற்கும் கோவளம் ஆற்றில் தென்சென்னை பகுதி மழைநீர்கால்வாய்களை கொண்டு சென்று சேர்ப்பதற்கு இரண்டு பிரிவுகளாக பிரித்து மழை நீர் கால்வாய்கள் கான்கிரீட் அமைத்து மேல் மூடியும் அமைத்து வேகமாக நடந்து வருகிறது

சுமார் பல நூறு கிலோ மீட்டருக்கு மேல் இந்த பணிகள் நடந்து வருகிறது அந்த நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது இன்னும் இரண்டு ஆண்டுகளில் முழுமையாக நிறைவடைந்து இந்த கால்வாய்களில் மழைநீர் செல்லும் பொழுது பழையது பாதிப்பு இவ்வளவு இருக்காது.

அதாவது 240 சென்டிமீட்டர் வரை ஒரே நாளில் மழை பெய்கின்ற பொழுது அளவுக்கு அதிகமாக நீர் பெருக்கெடுத்து வருகிற பொழுது எத்தனை கோடி ரூபாய் செலவு செய்தாலும் அந்த வாய்க்கால், மழைநீர் பெருக்கெடுத்து ஓடும்போது அத்தனை நீரும் செல்ல முடியாது அதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்



**கோவை செல்வராஜ்**
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

மழை நின்றதும் இரண்டு மணி நேரத்தில் பழைய சென்னை மாநகர் பகுதிகளில் இந்த கால்வாய்கள் வழியாக அனைத்து நீர்களும் சென்றுவிட்டது.

புதிதாக சென்னை மாநகராட்சி பகுதிகளில் இணைத்த பகுதிகளில் இப்பொழுது மழைநீர் தேங்கி நிற்கிறது அதை புரிந்து கொள்ள வேண்டும். அங்கு பணிகள் நடந்துவருகிறது.

மக்கள் தங்கள் உழைப்பின் மூலம் தொழிலின் மூலம் ஈட்டிய பணத்திற்கு வருமான வரி யாக ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடிக்கு மேல் ஒன்றிய அரசுக்கு செலுத்தி வருகிறார்கள் தொழில்துறையில் வியாபாரத் துறையில் வணிகர்கள் உட்பட ஜி.எஸ்.டி. வரிகள் மூலம் ஒவ்வொரு மாதமும் 20 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம் வரை செலுத்துகிறார்கள் ஒரு ஆண்டில் மூன்று லட்சம் கோடி வரை ஜி.எஸ்.டி. வழியாக செலுத்தி அதில் 50 சதவீதம் ஒன்றிய அரசுக்கு சுமார் ஒன்றரை லட்சம் கோடி வரை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்

ஒரு ஆண்டுக்கு 2 1/2 லட்சம் கோடி என்றால் இந்த ஒன்பது ஆண்டுகளில் எத்தனை லட்சம் கோடி தமிழ்நாடு மக்கள் வருமான வரியாக, ஜி.எஸ்.டி. வரியாக, கலால் வரியாக, மோட்டார் வாகன வரியாக, சாலை வரியாக, சுங்கவரியாக, செலுத்தி இருக்கிறார்கள் என்பதனை ஒரு கணம் ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் நெஞ்சில் கையை வைத்து மனசாட்சியோடு நினைத்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவிலேயே அதிக வரியை ஒன்றிய அரசுக்கு கொடுக்கிற இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள் ஏன் தமிழ்நாட்டு மக்கள் என்ன பாவம் செய்தார்கள் உங்களுக்கு பாதித்தால் பேரிடர் நிவாரண நிதியாக ஒரு பத்தாயிரம் கோடியை கொடுப்பதற்கு ஒன்றிய அரசுக்குஎன்ன கஷ்டம் நீங்கள் அரசியல் ரீதியாக பார்க்கக் கூடாது.

மனிதனுக்கு மனித நேயமும் கஷ்டமான நேரத்தில் சோதனையான நேரத்தில் உதவுவதுதான் ஒரு அரசினுடைய கடமையாக இருக்க முடியும் அந்த முறையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்றிய அமைச்சர் தமிழக மக்கள் மீது இரக்க குணம் இல்லாமல் பாதித்த மக்களை காப்பாற்ற வேண்டும் என்கிற ஒரு மனிதநேயம் கூட இல்லாமல் செய்தியாளர்களை அழைத்து அரசியல் ரீதியாக காழ்ப்புணர்ச்சியுடன் பேசி இருப்பது யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஒன்றிய அரசு அமைந்த பிறகு தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பாதிப்பு 2015 ஆம் ஆண்டு கடுமையான வெள்ளம் பாதித்து மக்கள் துயருற்றபொழுது தமிழக அரசு கேட்டது 25 ஆயிரத்து 912 கோடி, ஒன்றிய அரசு கொடுத்தது 1737 கோடி.

2016-2017 வருடத்தில் வறட்சிக்கு 39 ஆயிரத்து 565 கோடி கேட்டதில் ஒன்றிய அரசு கொடுத்தது 1748 கோடி. 2016 - 2017 வார்தா புயல் பாதிப்புக்கு கேட்டது 22 573 கோடி. ஒன்றிய அரசு கொடுத்தது 266 கோடி. 2018 ஒகி புயல் கனமழை பாதிப்பு கேட்டது 9302 கோடி, கொடுத்தது 130 கோடி. 2019 கஜா புயல் பாதிப்புக்கு கேட்டது 1,799 கோடி, கொடுத்தது 1146 கோடி.

நிவர் புயல் மாநில அரசு கேட்டது 3 ஆயிரத்து 758 கோடி, கொடுத்தது 63 கோடி. புரவி புயல் பாதிப்பு கேட்டது 1514 கோடி கொடுத்தது 223 கோடி.

ஜனவரி 2021 இல் கனமழை பாதிப்புக்கு கேட்டது 900 கோடி, கொடுத்தது 213 கோடி. 2021-22 கன மழை வெள்ளம் பாதிப்புக்கு நாம் கேட்டது 6 ஆயிரம் கோடி, கொடுத்தது 352 கோடி.

மொத்தமாக 2015ல் இருந்து 2022 வரை மாநில அரசு கேட்டது ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 655 கோடி ஒன்றிய அரசு கொடுத்தது 5884 கோடி.

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புக்கு தமிழக அரசு கேட்பது சுமார் 21,000 கோடி வேண்டும் என்று கேட்கிறோம்

தாற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி

நிரந்தர நிவாரணத் தொகையாக 12659 கோடி

அவசரகால நிவாரண நிதியாக 2000 கோடி உடனடியாக தர வேண்டும் என்றும் ஒன்றிய அரசுடன் கேட்டிருக்கிறோம்.

இந்தியாவில் தான் தமிழகம் இருக்கிறது தமிழக மக்களும் வாழ்கிறார்கள் அவர்களுக்கு உதவ வேண்டியது நம்முடைய கடமை அவர்கள் வாழ்வாதாரத்தை காக்க வேண்டியது நம்முடைய கடமை அதற்கு மனசாட்சியோடு நாம் உதவியாக வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் ஒன்றிய அரசின் பிரதமர் அவர்களும் உள்துறை அமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் ஒன்று சேர்ந்து நல்ல முடிவு எடுத்து தயவுசெய்து தமிழ்நாடு மக்கள் மீது நல்ல எண்ணம் கொண்டு நிதியை ஒதுக்குங்கள்

அரசியல் செய்வது என்பது தேர்தல் களத்தில் இப்பொழுது இந்த நேரத்தில் மக்கள் பாதித்த நேரத்தில் அரசியல் செய்வது நாகரீகமாக இருக்காது நிதியை கொடுங்கள்.

ஒன்றிய அரசுக்கு நிதி கொடுக்கிற மாநிலங்களாக இருக்கிற உத்தரபிரதேசம் ராஜஸ்தான் பீகார்.மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு அதிகமாக நிதியை ஒன்றிய அரசு ஒதுக்குகிறது.

உதாரணமாக நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி ஒன்றிய அரசு மொத்த வரி வருவாயில் 41% ஒரு நிதியாண்டில் 14 தவணைகள் மூலம் மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

பெரும் நிறுவன வரி, வருமான வரி, சொத்து வரி, சுங்கவரி, ஜி.எஸ்.டி. வரி போன்ற ஒன்றிய அரசுக்கு கிடைக்கும் நிதியில் இருந்து மாநிலங்களுக்கு பகிர்ந்து கொடுப்பதில் இந்த வஞ்சனை நடந்திருக்கிறது.

முதல் தவணையில் 72 ஆயிரத்து 961 கோடி ஒன்றிய அரசு கொடுக்கிறது. இதில்

*தமிழ்நாட்டுக்கு 2976 கோடி

*உத்தரப்பிரதேசத்திற்கு 13 ஆயிரத்து 88 கோடி

*பீகாருக்கு 7,338 கோடி

* மத்திய பிரதேசத்துக்கு 5 ஆயிரத்து 727 கோடி

* மேற்கு வங்காளத்துக்கு ரூ.5,488 கோடி

* மராட்டியத்திற்கு 4,608 கோடி

* ராஜஸ்தானுக்கு 4,396 கோடி

* ஆந்திராவுக்கு 2952 கோடி

தமிழ்நாட்டுக்கு மட்டும் எவ்வளவு குறைவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை பார்க்கிற பொழுது தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது என்பது உறுதியாக தெரிகிறது.

தமிழக மக்கள் சார்பாக ஒன்றிய அரசை கேட்கிறோம் நாங்கள் உங்களிடத்தில் யாசகம் கேட்கவில்லை நாங்கள் கட்டிய வரிப்பணத்தில் ஒன்றிய அரசு நடக்கிறது நாங்கள் கொடுத்த வரி பணத்தில் எங்களுக்கு இந்த வெள்ள பாதிப்பு மக்களை காப்பாற்ற நிதியை கொடுங்கள் என்று தான் கேட்கிறோம்.

தனிப்பட்ட முறையில் உங்கள் சொந்த பணத்தை கேட்கவில்லை உங்கள் வீட்டு பணத்தை கேட்கவில்லை நாங்கள் கொடுத்த வரிப்பணத்தில் கேட்கிறோம் எங்களுக்கு நிதியை ஒதுக்குங்கள்

எல்லா மாநிலங்களுக்கும் எந்த அடிப்படையில் ஒதுக்குகிறீர்களோ அந்த அடிப்படையில் நாங்கள் கொடுத்த வரிப்பணத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு அதிக நிதியை ஒதுக்குங்கள் எதற்காக வஞ்சிக்கிறீர்கள் எதற்காக துரோகம் செய்கிறீர்கள்.

எதற்காக நாங்கள் அதிகமாக கட்டிய வரிப்பணத்தில் இருந்து குறைந்த வரி கட்டுகிற மாநிலத்திற்கு அதிகமாக நிதியே ஒதுக்குகிறார்கள் தயவு செய்து தமிழக மக்களை ஏமாற்றாதீர்கள்.

ஒன்றிய அரசு ஒதுக்குகிற 41% நமக்கு வர வேண்டிய பங்கு என்று பார்த்தால் சுமார் 25 ஆயிரம் கோடியில் இருந்து 30 ஆயிரம் கோடி வரை வர வேண்டும் அந்த அடிப்படையில் எந்த கணக்குபடி இவ்வளவு குறைவாக தருகிறார்கள்.

என்று தெரியவில்லை தமிழ்நாட்டுக்கு என்றால் எல்லா விதத்திலும் வஞ்சிக்கிற அரசாக ஒன்றிய அரசு இருக்கிறது.

மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் தங்களது எதிர்ப்புகளை குமுறல்களை தேர்தல் நேரங்களில் தான் காட்டுவார்கள் 2019இல் அடியோடு தோல்வி அடைய வைத்தார்கள் 2024 இல் ஒட்டுமொத்தமாக டெபாசிட் தொகை கூட கிடைக்காத அளவுக்கு தோல்வி அடைய செய்வார்கள்.

---

## கன மழை: தென் மாவட்ட மக்களுக்கு அறிவித்த

# நிவாரணத் தொகை வழங்கும் பணியை தொடங்கி விட்டோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.31-

தென் மாவட்டங்களைப் புரட்டிப் போட்ட வெள்ளப் பாதிப்பிலிருந்து மக்கள் மீண்டெழ அறிவித்த நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கத் தொடங்கி விட்டோம் என்றும், நிவாரணத் தொகையை அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதியும் மக்களிடம் வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தனர் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தென் மாவட்டங்களைப் புரட்டிப் போட்ட வெள்ளப் பாதிப்பிலிருந்து மக்கள் மீண்டெழ அறிவித்த நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கத் தொடங்கிவிட்டோம்.

மழைவெள்ளம் ஏற்பட்டவுடன் மக்களுக்குத் துணையாகக் களத்தில் இருந்த அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களும் நிவாரணத் தொகையை மக்களிடம் வழங்கும் பணியைத் தொடங்கி வைத்தனர்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும்

# மக்களைச் சென்றடைய ஏற்படுத்தியதே “மக்களுடன் முதல்வர்” திட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

*சென்னை, டிச.31-*

*கலசப்பாக்கம் வட்டம் புதுப்பாளையம் பேரூராட்சி கே.பி. திருமண மண்டபத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ முகாம் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), அரசு துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*

*பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மக்களின் தேவைகள் அறிந்து பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக அரசின் சேவைகள் விரைவாகும் எளிதாகவும் மக்களை சென்றடையும் வகையிலும் வெளிப்படை தன்மையை ஏற்படுத்திட ‘மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு துவக்கி வைத்து செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் டிசம்பர் 18 முதல் ஜனவரி 04.2024 வரை ‘மக்களுடன் முதல்வர்’ என்ற திட்ட முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

***ரூ.17 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!***

*நமது மாவட்டத்தில் திருவண்ணாமலை, வந்தவாசி, ஆரணி, செய்யார், ஆகிய நகராட்சிகளிலும் வேட்டவலம், கீழ்பென்னாத்தூர், செங்கம், புதுப்பாளையம் போளூர், களம்பூர், சேத்துப்பட்டு, பெரணமல்லூர், தேசூர், கண்ணமங்கலம் ஆகிய பேரூராட்சிகளிலும், இந்த முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த புதுப்பாளையம் பேரூராட்சியில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு ரூபாய் 17 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் அறிவித்து செயல்படுத்தப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் உள்ள 10 பேரூராட்சிகளில் 2021-2023 நிதியாண்டில் ரூபாய் 31 கோடியே 75 லட்சம் மதிப்பில் 26 திட்டப்பணிகளும், 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் 233 பணிகளும், 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.25 கோடி மதிப்பில் 46 பணிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடைக்கோடி மக்களுக்கும் அரசின் சேவைகள் விரைவாக சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. அரசுத்துறை அதிகாரிகளை பொதுமக்கள் சென்று பார்த்த காலம் மாறி பொதுமக்களை அரசுத் துறை அதிகாரிகள் மனுக்களைப் பெற்று குறைகளை நிவர்த்தி செய்யும் சூழ்நிலை உருவாகி உள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களிடம் சென்று மக்களோடு மக்களாக சேர்ந்து வாழ மக்களுக்காகப் பணியாற்று என்ற அண்ணாவின் கூற்றுக்கு ஏற்ப தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று மண்டல வாரியாக ஆய்வுக் கூட்டம் நடத்தி பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார். மேலும் அரசு அறிவித்த திட்டங்கள் மக்களுக்குச் சென்றடைகிறதா என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரடியாகக் கேட்டு தெரிந்து கொள்கிறார்.*



***முதலமைச்சரின் முன்னோடித் திட்டங்கள்!***

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி பொதுமக்களின் கோரிக்கைகள் தீர்வு காணவும் அரசின் நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதி செய்யவும் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர், ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ போன்ற திட்டங்களையும் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், பெண்களுக்கான விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், நான் முதல்வன், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 போன்ற முன்னோடித் திட்டங்களை அறிவித்து சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறார்.*

*அதன் தொடர்ச்சியாக இப்போது ‘மக்களுடன் முதல்வர்’ என்ற புதிய திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிட நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத் துறை, மகளிர் திட்டம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கை மனுக்களைப் பெற்று தீர்வு காண்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் அனைத்து நகர்ப்புற பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது நமது திராவிட மடல் அரசின் கீழ் தான் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு பல்வேறு சிறப்பான திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஆதரவும், ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும் என பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு கேட்டுக்கொண்டார்.*

*பெறப்பட்ட கோரிக்கை மனுக்களில் உடனடி தீர்வாக 7 நபர்களுக்கு பட்டா மாறுதல் ஆணை, பெயர் மாற்றம் ஆணை மற்றும் மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை அடையாள அட்டையினை பொதுப்பணித்துறை அமைச்சர் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. பொன்னி சுந்தரபாண்டியன், பேரூராட்சி தலைவர் திருமதி. செல்வபாரதி மனோஜ் குமார், செயல் அலுவலர் முகமது ரிஸ்வான், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.கே. தண்டபாணி

**டிசம்பர் 31 (2021)**



**1969ஆம் ஆண்டில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**1972ஆம் ஆண்டில் கிளை பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளராகவும் –1991 முதல் மறையும் காலம் வரையிலான 25 ஆண்டுகள் தொடர்ந்து காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**1986, 1996, 2006, 2011 ஆகிய நான்கு முறை, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி மன்றத் தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**